


# ஆஷுரா நோன்பின் சிறப்புகள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

1

## சிறப்புமிக்க முஹர்ரம் மாத நோன்புகள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

ரமளான் மாத நோன்புக்கு அடுத்தபடியாகச் சிறந்த நோன்பு யாதெனில், அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாத நோன்பாகும்.

கடமையாக்கப்பட்ட தொழுகைக்கு அடுத்தபடியாகச் சிறந்த தொழுகை, இரவுத் தொழுகை (தஹஜ்ஜுத்) ஆகும்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2157

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

2

## சிறப்புமிக்கது

ஆஷூரா எனும் இந்த (முஹர்ரம் பத்தாம்) நாளையும் ரமளான் எனும் இந்த மாதத்தையும் தவிர, வேறெதையும் ஏனையவற்றை விடச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து நபி (ﷺ) அவர்கள் நோன்பு நோற்பதை நான் பார்த்ததில்லை.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 2006

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

3

## ஒரு வருட சிறு பாவங்களுக்குப் பரிகாரம்

ஆஷூரா (முஹர்ரம் பத்தாவது) நாளில் நோன்பு நோற்பது குறித்து வினவப்பட்டது. அதற்கு ’அது கடந்த ஆண்டின் பாவப்பரிகாரமாகும்’ என நபியவர்கள் கூறினார்கள்.

(ஹதீஸின் ஒரு பகுதி)

அறிவிப்பாளர்: அபூகத்தாதா அல்அன்சாரி (ரலி) அவர்கள், முஸ்லிம் 2152

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

4

## ஆரம்பக் காலத்தில் நபி(ﷺ) அவர்கள் நோற்குமாறு கட்டளையிட்ட நோன்பு

அறியாமைக் காலத்தில் குறைஷியர் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றுவந்தனர். ரமளான் நோன்பு கடமையாக்கப்படும் வரை அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களும் ஆஷூரா நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள்.

(ரமளான் நோன்பு கடமையாக்கப்பட்ட) பின்னர் ‘(ஆஷூரா நாளின் நோன்பை) நோற்க விரும்புபவர் அதை நோற்கட்டும்! விட்டுவிட விரும்புபவர் அதை விட்டுவிடட்டும்! எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 1893

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

5

## ஆரம்பக் காலத்தில் நபி(ﷺ) அவர்கள் நோற்குமாறு கட்டளையிட்ட நோன்பு

முஹர்ரம் பத்தாவது நாளில் (ஆஷூரா) நோன்பு நோற்குமாறு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டு வந்தார்கள்.

அந்நோன்பை நோற்குமாறு எங்களை ஊக்குவிக்கவும் செய்வார்கள். அந்த நாளில் (நாங்கள் நோன்பு நோற்கிறோமா என) எங்களைக் கவனித்தும் வந்தார்கள்.

ரமளான் நோன்பு கடமையாக்கப்பட்டபோது, (ஆஷூரா நோன்பு நோற்குமாறு) எங்களுக்குக் கட்டளையிடவுமில்லை, எங்களுக்குத் தடைவிதிக்கவுமில்லை. அந்த நாளில் எங்களைக் கவனிக்கவுமில்லை.

அறிவிப்பாளர்:ஜாபிர் பின் சமுரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2080

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

6

## புனித கஃபாவுக்கு புதிய திரைச்சீலை மாற்றப்படும் நாள்

ரமளான் நோன்பு கடமையாக்கப் படுவதற்கு முன்னால் மக்கள் ஆஷூரா (முஹர்ரம் பத்தாம் நாளில்) நோன்பு நோற்றுவந்தார்கள்.
அதுதான் கஅபாவுக்குப் புதிய திரைச்சீலை போர்த்தப்படும் நாளாக இருந்தது.

அல்லாஹ் ரமளான் நோன்பைக் கடமையாக்கியபோது, "யார் ஆஷூரா நோன்பு நோற்க விரும்புகிறாரோ அவர் அதை நோற்றுக் கொள்ளட்டும்! யார் அதை விட்டுவிட விரும்புகிறாரோ அவர் அதை விட்டுவிடட்டும்!" என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 1592

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

7

## அறிவிப்பு செய்தல்

நபி (ﷺ) அவர்கள் ஆஷூரா (முஹர்ரம் பத்தாம்) நாளன்று ஒருவரை அனுப்பி, "(இன்று) சாப்பிட்டுவிட்டவர் (இரவுவரை தமது நோன்பை) முழுமை யாக்கட்டும்! அல்லது நோற்கட்டும்! சாப்பிடாமல் இருப்பவர் (நோன்பைத் தொடரட்டும்) சாப்பிட வேண்டாம்!" என்று மக்களுக்கு அறிவிக்கச் செய்தார்கள்.

அறிவிப்பாளர்: சலமா பின் அல்அக்வஉ (ரலி) அவர்கள், புகாரி 1924

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

8

## சிறுவர்களையும் நோன்பு நோற்க வைத்தார்கள்

நபி (ﷺ) அவர்கள் முஹர்ரம் பத்தாம் நாள் (ஆஷூரா தினத்தன்று) காலையில் (மதீனா புறநகரங்களில் உள்ள) அன்சாரிகளின் கிராமங்களுக்கு ஆளனுப்பி, “(இன்று) யார் நோன்பு நோற்காதவராகக் காலைப் பொழுதை அடைந்துவிட்டாரோ அவர் இன்றைய தினத்தின் எஞ்சிய நேரத்தை (நோன்பிருந்து) நிறைவு செய்யட்டும்! யார் நோன்பாளியாகக் காலைப் பொழுதை அடைந்தாரோ அவர் நோன்பைத் தொடரட்டும்!” என்று அறிவிக்கச் செய்தார்கள்.

நாங்கள் அதன் பின்னர் அந்நாளில் நோன்பு நோற்கலானோம், எங்கள் சிறுவர்களையும் நோன்பு நோற்கச் செய்வோம். கம்பளியாலான விளையாட்டுப் பொருட்களை அவர்களுக்காக நாங்கள் (தயார்) செய்து, அவர்களில் ஒருவன் (பசியால்) உணவு கேட்டு அழும்போது நோன்பு துறக்கும் நேரம் வரும்வரை (அவர்கள் பசியை மறந்திருப்பதற்காக) அவர்களிடம் அந்த விளையாட்டுப் பொருட்களைக் கொடுப்போம்.

அறிவிப்பாளர்:ருபய்யிஉ பின்த் முஅவ்வித் (ரலி) அவர்கள், புகாரி 1960

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

9

## மூஸா (அலை) அவர்கள் நோற்ற நோன்பு

நபி(ﷺ) அவர்கள் மதீனா வந்த போது யூதர்கள் (முஹர்ரம் மாத பத்தாம் நாளான) ஆஷூரா நாளில் நோன்பு நோற்பதைக் கண்டார்கள்.

“இது என்ன நாள் ?” என்று கேட்டார்கள். “இது மாபெரும் நாள்! மூஸா (அலை) அவர்களை இந்த நாளில் தான் அல்லாஹ் காப்பாற்றினான். ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை மூழ்கடித்தான். ஆகவே, மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் விதத்தில் இந்நோன்பை நோற்றார்கள்” என்று யூதர்கள் கூறினர்.

நபி(ﷺ) அவர்கள், நான் அவர்களை விட மூஸாவுக்கு நெருக்கமானவன் என்று கூறிவிட்டு அந்த நாளில் தாமும் நோன்பு நோற்று, தம் தோழர்களுக்கும் நோன்பு நோற்கும்படி கட்டளை இட்டார்கள்

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 3397

# ஆஷூரா நோன்பின் சிறப்புகள்

10

## முஹர்ரம் 9வது நாளும் நோன்பு நோற்றல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஆஷூரா நாளில் தாமும் நோன்பு நோற்று, நோன்பு நோற்குமாறு (மக்களுக்கும்) கட்டளையிட்டார்கள்.

அப்போது மக்கள், 'அல்லாஹ்வின் தூதரே! இது யூதர்களும் கிறிஸ்தவர்களும் கண்ணியப்படுத்தும் நாளாயிற்றே?' என்று வினவினர்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், 'இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) அடுத்த ஆண்டில் நாம் (முஹர்ரம்) ஒன்பதாவது நாளில் நோன்பு நோற்போம்' என்று கூறினார்கள். ஆனால், அடுத்த ஆண்டு வருவதற்குள் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் இறந்துவிட்டார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2088